©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 225] CHENNAI, TUESDAY, NOVEMBER 11, 2014
Aippasi 25, Jaya, Thiruvalluvar Aandu–2045

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், கரூர் மாவட்டம்.**

**கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியம், இனுங்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் அறிவிக்கை.**

*(ந.க.எண். அ2/2184/2012)*

**No. VI(2)/259(b-1)/2014.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **205** உட்பிரிவு **11**ல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியம், இனுங்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. டி. இளஞ்சியம் என்பவர் அரசாணைகளுக்கு முரணாக செயல்பட்டு ஊராட்சி நிதியில் இழப்பினை ஏற்படுத்தி பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் முறைகேடுகள் உறுதிபடுத்தப்பட்ட நிலையில் விசாரணை அலுவலரின் அறிக்கையின் அடிப்படையிலும் உரிய அனுமதியின்றி முறைகேடாக தொகை எடுத்து கையாடல் செய்யப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் ஊராட்சி மன்றத் தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அரசு நிதியை கையாடல் செய்து இழப்பு ஏற்படுத்திய இனுங்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. டி. இளஞ்சியம் என்பவரை இனுங்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்ததை உறுதி செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த உத்தரவு *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியம், இனுங்கூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் அறிவிக்கை.**

*(ந.க.எண். அ2/2184/2012)*

**No. VI(2)/259(b-2)/2014.çû**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 206 உட்பிரிவு 11ல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியம், இனுங்கூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. எம். செல்வராஜ் என்பவர் அரசாணைகளுக்கு முரணாக செயல்பட்டு ஊராட்சி நிதியில் இழப்பினை ஏற்படுத்தி பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் முறைகேடுகள் உறுதிபடுத்தப்பட்ட நிலையில் விசாரணை அலுவலரின் அறிக்கையின் அடிப்படையிலும் உரிய அனுமதியின்றி முறைகேடாக தொகை எடுத்து கையாடல் செய்யப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அரசு நிதியை கையாடல் செய்து இழப்பு ஏற்படுத்திய இனுங்கூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. எம். செல்வராஜ் என்பவரை இனுங்கூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்ததை உறுதி செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த உத்தரவு *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

கரூர்,
2014 நவம்பர் 10.

**ச. ஜெயந்தி,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU